**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி**

முன்னிலை : **திருமதி.வெ.மோனிகா, B.A., B.L., L.L.M.,**

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

திருநெல்வேலி

2026 ம் ஆண்டு ஜூலை மாதம் 22 ம் நாள் புதன்கிழமை

**இ.பி.எண்.23/2026 அதன் அ.வ.எண்.475/2019**

1. சேகர்
2. முத்தம்மாள் ... மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

/எதிர்/

மாரியம்மாள் ... எதிர்மனுதாரர் / வாதி

இந்த மனுவானது 09.07.2026 அன்று இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக விசாரணைக்கு வந்த போது, மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.பேச்சிமுத்து அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.C.ஜேசுதாஸ் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்களைக் கேட்டும் மற்றும் இரு தரப்பு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று வரை இந்நீதிமன்ற ஆய்விலிருந்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்.....

**உத்தரவு**

இந்த நிறைவேற்றுகை மனுவானது, உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 21 விதி 35–ன் கீழ் மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2. மனுவின் சுருக்கம்</u>**

மனுவின் எதிர்மனுதாரர், மனுதாரர்கள் மீது 2 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலியில் தாக்கல் செய்த அ.வ.எண்.475/2019 என்ற வழக்கானது விசாரணைக்கு பின்பு கடந்த 06.10.2025 ம் தேதி வழக்கு பரிகாரங்களைப் பொருத்து தள்ளுபடி செய்யப்பட்டும், மனுவின் மனுதாரர்கள்/பிரதிவாதிகள், எதிர்மனுதாரர்/வாதி மீது தாக்கல் செய்த எதிர்கோரிக்கையானது விசாரணைக்கு பின்பு கடந்த 06.10.2025 ம் தேதி எதிர்கோரிக்கை பரிகாரங்கள் வழங்கி தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி எதிர்கோரிக்கை தீர்ப்பாணையின் அடிப்படையில், நீதிமன்ற ஆணையர் வரைபடத்தில் E1, E, I பகுதியில் வாதி கட்டியுள்ள காம்பவுண்ட் சுவரை அப்புறப்படுத்தி E1, E, I பகுதியின் சுவாதீனத்தை பிரதிவாதியிடம், வாதி கொடுக்க வேண்டுமெனக் கோரி மனுதாரர்கள் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள்.

**<u>3. எதிருரை சுருக்கம்</u>**

மனுதாரர் தாக்கல் செய்திருக்கும் மனு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல. நிறைவேற்றுதல் மனுவில் உள்ள சங்கதிகளை எதிர்மனுதாரர் மறுக்கிறார். மனுதாரர் / பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட தபசில் சொத்தினை நீதிமன்ற தீர்ப்புரையில் ஆணையர் அறிக்கையின் படி E1, E, I பகுதியை அப்புறப்படுத்தி காலி சுவாதீனத்தை எதிர்மனுதாரர் வசம் ஒப்படைக்க அசல் மனுவில் கடந்த 06.10.2025 ம் தேதி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது உண்மையாகும். எதிர்மனுதாரர் அசல் வழக்கில் சொல்லியுள்ள தீர்ப்பாணையை எதிர்த்து மேல்முறையீடு மனு தாக்கல் செய்துள்ளார். மேற்படி உண்மை விபரங்களை மறைத்து மனுதாரர் தாக்கல் செய்துள்ள நிறைவேற்றுதல்

மனுவானது எதிர்மனுதாரரின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

4. இம்மனுவில் இரு தரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**5. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே.**

6. இரு தரப்பு வாதுரை கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. மனுவின் எதிர்மனுதாரர், மனுதாரர்கள் மீது 2 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலியில் தாக்கல் செய்த அ.வ.எண்.475/2019 என்ற வழக்கானது விசாரணைக்கு பின்பு கடந்த 06.10.2025 ம் தேதி வழக்கு பரிகாரங்களைப் பொருத்து தள்ளுபடி செய்யப்பட்டும், மனுவின் மனுதாரர்கள்/பிரதிவாதிகள், எதிர்மனுதாரர்/வாதி மீது தாக்கல் செய்த எதிர்கோரிக்கையானது விசாரணைக்கு பின்பு கடந்த 06.10.2025 ம் தேதி நீதிமன்ற ஆணையர் வரைபடத்தில் E1, E, I பகுதியில் வாதி கட்டியுள்ள காம்பவுண்ட் சுவரை அப்புறப்படுத்தி E1, E, I பகுதியின் சுவாதீனத்தை பிரதிவாதியிடம், வாதி கொடுக்க வேண்டுமெனக் கூறி தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது தெரிய வருகிறது.

7. இந்த மனுதாரர்கள், எதிர்மனுதாரர் மீது அ.வ.எண்.475/2019 ல் தாக்கல் செய்த எதிர்கோரிக்கை பரிகாரத்தில் கடந்த 06.10.2025 ம் தேதி தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பது இரு தரப்பிலும் ஒத்துக் கொள்ளப்பட்ட சங்கதியாகும். இந்நிலையில், மேற்படி மனு சங்கதிகளை மறுத்து

எதிர்மனுதாரர்கள் ஆட்சேபணை தெரிவித்து அசல் வழக்கை எதிர்த்து மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளதாக எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், மேற்படி மேல்முறையீடு தாக்கல் செய்தததற்கான ஆவணங்கள் மற்றும் சாட்சியங்கள் எதுவும் இந்நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தவில்லை. மேலும், இந்த நிறைவேற்றுதல் மனுவை மேல் நடத்த தடையாணை எதுவும் மேல்முறையீட்டு நீதிமன்றங்கள் எதுவும் பிறப்பிக்கவில்லை என்பதை அறிய முடிகிறது.

8. எனவே, நிறைவேற்றுதல் நீதிமன்றமான இந்நீதிமன்றத்திற்கு மேல்முறையீட்டு நீதிமன்றங்களால் அசல் வழக்குடன் தாக்கல் செய்யப்பட்ட எதிரிடை கோரிக்கையில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையை நிறைவேற்ற எந்தவிதமான தடையாணையும் பிறப்பிக்கப்படவில்லை என்பதாலும், எதிர்மனுதாரர் மேற்படி எதிரிடைகோரிக்கையில் பிறப்பிக்கப்பட்ட நீதிமன்ற உத்தரவிற்கு இணங்க செயல்படாமல் இருந்து வருகிறார் என்பதாலும், நிறைவேற்றுதல் நீதிமன்றமான இந்நீதிமன்றம் அ.வ.எண்.475/2019 ன் வழக்கின் எதிரிடைகோரிக்கையில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையில், "நீதிமன்ற ஆணையர் வரைபடத்தில் E1, E, I பகுதியில் வாதி கட்டியுள்ள காம்பவுண்ட் சுவரை அப்புறப்படுத்தி E1, E, I பகுதியின் சுவாதீனத்தை பிரதிவாதியிடம், வாதி கொடுக்க வேண்டுமென உத்தரவிடப்படுகிறது." எனக் கூறப்பட்டுள்ளது.

9. மேற்கண்ட தீர்ப்பாணைக்கு இணங்க நீதிமன்ற ஆணையர் வரைபடத்தில் E1, E, I பகுதியில் வாதி கட்டியுள்ள காம்பவுண்ட் சுவரை அப்புறப்படுத்தி E1, E, I பகுதியின் சுவாதீனத்தை எதிர்மனுதாரர் / வாதி, மனுதாரர்கள் / பிரதிவாதிகளிடம் கொடுக்க வேண்டிய பொறுப்பு இந்த நீதிமன்றத்திற்கு உள்ளது. அவ்வாறு மனு தபசில் சொத்தில் எதிர்மனுதாரர் ஏற்படுத்தியிருக்கும் ஆக்கிரமிப்பை அகற்றி

மனுதாரர்களிடம் வாழ்விப்பு செய்து கொடுப்பது தான் நீதியின் நலனுக்கும் சிறந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**இறுதியில், இம்மனு செலவு தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. Delivery Batta in 3 days. Delivery on or before 24.08.2026. Call on 25.08.2026.**

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026ம் ஆண்டு ஜூலை திங்கள் 22ம் நாளாகிய இன்று என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

VENKATACHALAM MONIKA

Orders uploaded on 22.07.2026
Digitally signed by VENKATACHALAM MONIKA
Date: 2026.07.22 19:06:32 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி.

1). மனுதாரர் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் : இல்லை
3). எதிர்மனுதாரர் தரப்பு, சான்றாவணங்கள் : இல்லை

VENKATACHALAM MONIKA

Orders uploaded on 22.07.2026
Digitally signed by VENKATACHALAM MONIKA
Date: 2026.07.22 19:06:38 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி.

மு.மா.உ.நீ, திருநெல்வேலி.
இ.பி.எண்.23/2026
அதன்
அ.வ.எண்.475/2019
வரைவு/சீரான உத்தரவு
நாள் – 22.07.2026